# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***
***SESSIONS CASE NO. 495/2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.18**

| | | |
|---|---|---|
| பெயர் | – | வனசுந்தர் |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 09$^{th}$ day of April 2025.**

(Accused produced on P.T. warrant through V.C.)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம் ஊத்துமலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருநெல்வேலி மாநகரம் தச்சநல்லூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது தாழையூத்து காவல்நிலைய குற்ற எண்.164/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) @ 392, 302 IPC என்ற வழக்கில் கொலை செய்யப்பட்டு இறந்த மாயாண்டி என்பவர் காணாமல் போனதாக அவரது மனைவி புஷ்பம் என்பவர் தச்சநல்லூர் காவல்நிலையத்தில் 27.6.2022 ம் தேதி கொடுத்த புகார் மனு மீது நிலைய குற்ற எண்.204/2022 சட்டப் பிரிவு Man Missing படி வழக்கு பதிவு செய்யப்பட்டு 15.8.2022 ம் தேதி தாழையூத்து காவல்நிலைய ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்து சான்றொப்பம் இட்டு வழங்க கேட்டதின்

அடிப்படையில் சான்றொப்பம் இட்டு குற்ற எண்.204/2022 சட்டப் பிரிவு Man Missing முதல் தகவல் அறிக்கையின் நகலை வழங்கினேன். நான் சான்றொப்பம் இட்டு வழங்கிய முதல் தகவல் அறிக்கையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.22 ஆகும். இது சம்பந்தமாக தாழையூத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

தச்சநல்லூர் காவல்நிலையத்தில் Man missing வழக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் பெயர் தில்லைநாயகம் என்றால் சரிதான். Man missing வழக்குகளை பொறுத்து பொதுவாக புகார்தாரர் புகார் கொண்டு வரும்போதே அவர்களிடம் காணாமல் போனவரின் புகைப்படத்தை வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். அதன் பிறகு ஓரிரு நாட்களில் காணாமல் போனவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் அது பொறுத்து தினசரி செய்தித்தாளில் விளம்பரப்படுத்துவது கட்டாயம் என்றால் சரிதான். என்னை தாழையூத்து காவல்நிலைய ஆய்வாளர் மேற்படி காவல்நிலைய குற்ற எண்.164/2022 சம்பந்தமாக 15.8.2022 அன்று தான் விசாரித்தார் என்றால் சரிதான். தாழையூத்து காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தபோது தச்சநல்லூர் காவல்நிலைய குற்ற எண்.202/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையை சான்றொப்பம் இட்ட நகலை வழங்கியதாக அவரிடம் நான் கூறவில்லை. 27.06.2022ம் தேதி Man missing வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு 15.08.2022 வரை என்ன புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் அதைப் பொறுத்து ஆய்வாளர் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. மேற்படி Man missing முதல் தகவல் அறிக்கையில் ரோஸ் கலர் கோடு போட்ட சட்டை என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன

மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புஷ்பம் என்பவர் எங்கள் காவல்நிலையத்தில் ஆஜராகி புகார்மனு கொடுத்ததாக சொல்வதும், அதன் அடிப்படையில் தில்லை நாயகம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. தாழையூத்து காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பின்னிட்டு இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத குற்ற எண்.202/2022 வழக்கை பொறுத்து தான் என்னிடம் விசாரணை செய்திருக்கிறார் என்றும், நான் அது குறித்து தான் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை